Regd. No M 4593.

தனிப்பிரதி விலை { பரியா, ... (ந. ராக)
... எம். சுப்பிரமணியன்

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 20-7-1946 ஆடி மீ 5உ { மலர் 41

## செங்கற்பட்டு மாவட்ட திராவிடர் மாநாடு

### 5000 தொண்டர்களின் அணிவகுப்பு

13-7-46 காலை 9 மணிக்குக் காஞ்சிபுரம் ஆடிசன் பேட்டைத் தோட்டியிலிருந்து மாபெரும் கறுப்புச்சட்டைப் படை ஊர்வலம் புறப்பட்டது. சுமார் 5000க்கு மேற்பட்ட தோழர்களும் தாய்மார்களும் அணிவகுத்து வந்தனர். தலைவர் பெரியார், தோழர்கள் என். அர்ச்சுனன், கே. கே. நீலமேகம் ஆகியோர் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். வழிநெடுக மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன. ஊர்வலம் காலை 11 மணிக்கு, காஞ்சி ஒலிமகம்மதுபேட்டையில் அமைக்கப்பட்டிருந்த பெரியார் பந்தலுக்கு வந்து சேர்ந்தது.

மாநாட்டில் தமிழ்நாட்டின் பல பாகங்களிலிருந்தும் 10,000 தோழர்கள் தாய்மார்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் கூடியிருந்தனர்.

மாநாட்டின் நோக்கத்தைத் தோழர் சி. டி. டி. அரசு எடுத்துரைத்தார்.

தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் கொடியேற்றினார்.

குடந்தைத்தோழர் கே. கே. நீலமேகம் மாநாட்டைத் திறந்துவைத்தார்.

வரவேற்புக்கழகத்தலைவர் தளபதி சி. என். அண்ணாதுரை யாவரையும் வரவேற்று சொற்பொழிவாற்றினார்.

தோழர்கள் சி. டி. டி. அரசு, போளூர் சுப்ரமணியம், கே. கோவிந்தசாமி, காஞ்சி கலியாண சுந்தரம், குடந்தை வி. சின்னத்தம்பி, சி வி எம். அண்ணாமலை, ஏ. பி. ஜனார்த்தனம், என். வி. நடராசன், தலைவர் பெரியார் ஆகியவர்கள் கேட்டுக்கொள்ள தோழர் என். அர்ச்சுனன் தலைமைவகித்து சொற்பொழிவாற்றினார்.

பின்னர் தோழர் ஈ. வி. கே. சம்பத் பேசினார். இத்துடன் காலைநிகழ்ச்சி முடிவுற்றது. பின்னர் பகல் உணவுக்குப்பின் பகல் 4 மணிக்கு மாநாடு கூடிற்று. தோழியர் பொருட்செல்வி அம்மையார் தியாகராயர் படத்தைத் திறந்தார். பெரியார் ராமசாமி சுமார் 3 மணி நேரம் விரிவுரையாற்றினார். இத்துடன் மாநாடு அடுத்த நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டது. இரவு திராவிட நடிகர் கழகத்தாரால் சிவாஜி கண்ட இந்துராஜ்யம் புதுவை அவக்கா பெருமாள் தலைமையில் நடிக்கப்பட்டது.

### மறுநாள் நிகழ்ச்சி

14-7-46 காலை 9 மணிக்கு மீண்டும் மாநாடு தோழர் என். அர்ச்சுனன் தலைமையில் கூடிற்று. பெரியார் படத்தை சி. டி. டி. அரசு அவர்களும், எம். சிங்காரவேலு எம். ஏ. பி. எல்., படத்தை காஞ்சி கல்யாணசுந்தரமும், த. நடராசன்-தாலமுத்து படத்தை தோழர் என். வி. நடராசனும் திறந்துவைத்தனர்.

பின்னர் தோழர்கள் ஜனார்த்தனம், அன்பழகன், நெடுஞ்செழியன், இராமாமிர்தத்தம்மாள், ஆ. திராவிடமணி ஆகியோர் பேசினர்.

பகல் உணவுக்குப்பின் மாநாடு மாலை 4 மணிக்குக் கூடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைவர் முடிவுரைக்குப்பின் வரவேற்புக் கமிட்டியார் சார்பாக மாநாட்டுத் தலைவருக்கும் மற்ற அனைவருக்கும் தோழர் என். வி. நடராசன் வணக்கம்கூறினார். பின்னர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் தோ... அன்பழகன் பேசினார்.

இரவு 9½ மணிக்கு சந்திரோதயம் நாடகம், ப... இராமலிங்கம் அவர்கள் த...மையில் நடைபெற்றது. தலை... பேசுகையில்;

தளபதி அ...துரை நாடகங்கள் எழுதி...துவருகிறவர். ...னாக இல்லாமல் நாடகசினிமாவில் பெரியதோர் மாற்றம் ஏற்பட்டு வருகிறதென்றும், கதை எழுதுகின்றவர்கள் சீர்திருத்தம்பற்றி இனியும் எழுதுவார்களானால் அவற்றிற்குக் காரணம் அண்ணாதுரை அவர்கள் வகுத்த வழிதானென்றும், கோவிலையும், குளத்தையும் வாயிலாகக்கொண்டு எழுதினாலன்றி வெற்றிபெற முடியாது என்று நினைத்திருந்த நாடக ஆசிரியர்களும், நாடக முதலாளிகளும் இந்த சமயம், ...சீர்திருத்தம் இவற்றில் ...உள்ளபடி அண்ணாதுரை எழுத்துக்களும் நடிப்பும் ஒரு பெரும் ...உண்டுபண்ணி...றென்றும், குன்றிக...மேலிருந்தும் கூடுமேன்றும் குறிப்பிட்டார்.

தோழர் சி. வி. எம். அண்ணாமலை அனைவருக்கும் வணக்கம் கூறினார். தோழர் ஈ. வி. கே. சம்பத் சந்திரோதயத்தில் நடித்த பிரமுகர்களையும் நடிகர்களையும் விளக்கிக் கூறி அவைகளைப் பாராட்டிப் பேசினார்.

ஷை மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்.

1, காங்கிரஸ் மந்திரிசபை திராவிடமக்கள் எதிர்பார்த்த விதமாக

நடந்துகொள்ளாமல், திராவிடர்களின் "விடுதலை" உணர்ச்சிக்கு ஊறுதேடும் விதத்திலே நடந்துகொள்கிறபடியால், திராவிட மக்கள் தமது அதிர்ச்சியையும் வெறுப்புணர்ச்சியையும் காட்டிக்கொள்ள மந்திரிகளுக்குக் கருப்புக்கொடி பிடிப்பது என்று தலைவர் பெரியார் அவர்கள் குறிப்பிட்ட திட்டத்தை விசேஷ மாகாண மாநாடு கூட்டியோ, அல்லது நிர்வாகக் கமிட்டியைக் கூட்டியோ, நிறைவேற்றித் தரும்படி தலைவர் அவர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

2. சென்னை பக்கிங்காம்—கர்னாடிக் மில் தொழிலாளரின் வேலை நிறுத்தக் கோரிக்கையான இனப் போராட்டத்தை இம்மாநாடு ஆதரிப்பதுடன், தொழிலாளர்மீது அடக்குமுறைப்பிரயோகம் செய்துவரும் காங்கரஸ் மந்திரி சபையினரின் செயலை இம்மாநாடு கண்டிக்கிறது

3. அரசியல் நிர்ணய சபையைக் கூட்டும் அங்கத்தினர் இந்நாட்டின் பெரும்பான்மையான திராவிட மக்களின் அமைப்பாகிய திராவிட கழகத்தைக் கலக்காமல் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதை இம்மாநாடு கண்டிப்பதுடன் அச் சபையின் மூலமாக நிர்ணயிக்கப்படும் முடிவு எதுவும் திராவிட மக்களைக்கட்டுப்படுத்தாது என்பதையும் அரசியலாருக்கு எச்சரிக்கைசெய்து தெரிவித்துக்கொள்கிறது.

4. திருச்சி ரேடியோ நிலையத்தில் திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்கு சொற்பொழிவாற்ற சந்தர்ப்பம் அளிக்காமலிருப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

5. தமிழ்நாட்டில் எடுக்கப்படும் சினிமாப்படங்கள் பூராவும் சமூக சீர்திருத்தப் படங்களாகவும், இன உணர்ச்சி ஊட்டுகின்ற படங்களாகவும் இருந்தால்தான் திராவிடப் பொது மக்களின் ஆதரவு கிடைக்கும் என்பதைப் பட முதலாளிகளுக்கு இம்மாநாடு வற்புறுத்திக்கூறுகிறது.

6. இந்த ஜில்லாவுக்கு மாகாண நூல் ஜவுளி கமிஷனரால் ஒதுக்கப்பட்ட நூல் பேல்களை படிப்படியாகக் குறைத்துவிட்டால் மாதம் ஒன்றுக்கு ஒருவாரம்கூட வேலை செய்ய முடியாமல் கைத்தறி நெசவாளர் கஷ்டப்படுவதால், ஒதுக்கப்பட்ட நூல் பேல்களை உடனுக்குடன் கிடைக்கவும், கிடைக்கிற நூல்கள் உண்மையான நெசவாளர்களுக்குக் கிடைக்கிறமுறையில் திடீர் பார்வை (Sudden Checking) ஏற்பாடு செய்யும்படியும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது:

7. பட்டுக் கட்டுப்பாடு நீக்கப்பட்டால் பட்டுவிலை பட்டு நெசவுத் தொழிலாளிகளுக்கு அதிகக் கஷ்டமும் வேலையில்லாத் திண்டாட்டமும், கூலிக்குறைவும் ஏற்படும் ஆகையால் பட்டுக்கட்டுப்பாட்டை எடுக்காமல் நீடித்து நடத்தும்படி மத்திய சர்க்காருக்கு இம்மாநாடு வற்புறுத்திக்கூறுகிறது.

8. அரசியல் அலுவல்களிலும், கல்வித்துறையிலும், ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமை, திராவிட மக்களைப் பொறுத்தவரையில் போதுமானதாக அமைக்கப்படாத நிலைமையில் கல்வித்துறையில் வகுப்பு நீதியே இல்லாத தொல்லை ஒருபுறத்தில் வாட்ட, உயர்தரக்கல்விகளான, வைத்திய எஞ்சினீயரிங் கல்லூரிகளில், இருந்துவந்த வகுப்பு விகிதாசார உரிமை பாழாகும்படி, "தகுதி" என்ற போரால் பெரிதும் பார்ப்பன மாணவர்களையே சேர்த்திருப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கின்றது.

## ஈரோட்டில் தபால் சிப்பந்திகள் வேலை நிறுத்தம்

ஈரோட்டில் தபால் இலாக்காவின் போஸ்ட்மேன், கீழ்த்தர சிப்பந்திகள் (தந்தி மெஸெஞ்சர், ஆர். எம். எஸ். உள்பட) ஆகியவர்கள் 19-7-46 இரவு 12மணியிலிருந்து வேலை நிறுத்தம் செய்துள்ளார்கள்.

## அறிவிப்பு

"குடி அரசு", "ஜஸ்டிசைட்", "திராவிடநாடு" ஆகிய வாரப்பத்திரிகைகள் விற்பனைக்கு கீழ்க்கண்ட இடத்தில் கிடைக்கும்.

விலாசம்:-

சி. எத்திராஜுலு நாயுடு,
83, தர்மராஜா கோவில் தெரு,
பங்களூர் கண்டோன்மெண்டு.


## மணமகள் தேவை

தேவாங்கசெட்டி வகுப்பைச் சார்ந்தவரும், மாதம் ரூ. 100 நிரந்தர வருவாயுடையவருமான 20-ஆண்டு மணமகனுக்குப் போதிய கல்வியும், உடல்கட்டும், அழகும், தன்மான இயக்கப்பற்றுமுடைய மணமகள் எவ்வகுப்பினராயினும் சரியே. புகைப்படத்துடன் கீழ்கண்ட முகவரிக்கு வரயவும்.

R. P. Raju C/o
Dravidar Kazhagam,
Tiruppur.

## விற்பனைக்கு

"பார்ப்பனப் படுமோச விளக்கம்" என்னும் இந்நூல் டிம்மி 1/8 சைசில் 16பக்கங்களுடன் வெளிவந்துள்ளது. சுருக்கமாகப் பாக்களில் மிகத் தெளிவாகவும், அழகாகவும் சொல்லப்பெற்ற இக் கருத்துக்கள் நம் இயக்க மாணவ மணிகளுக்கும், திராவிடத் தோழர்களுக்கும் மிகவும் பயன்படும். விலை 0-3-0. தனிப்பிரதி வேண்டுவோர் 0-3-9 அணா தபால் தலை அனுப்புக.

குடி அரசு பதிப்பகம். ஈரோடு.


## "உதயம்"

### அறிவிப்பு

"உதயம்" 20-7-46 முதல் வெளிவருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. தபால் இலாகாவில் ஏற்பட்டுள்ள வேலை நிறுத்தத்தின் காரணமாகவும், காகிதம் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதத்தினாலும் 4-8-46ல் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அன்று எவ்விதத்திலும் வெளிவரும். முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் விபரம் எழுதித்தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர், "உதயம்"
திருவத்திபுரம். (N. A.)

# திருப்பு முகம்! திற விழி!

(வை. தி.)

திராவிட இனத்தில் தோன்றி பற்பல மாணவ இயக்கங்களிலும் சிதறுண்டு கிடக்கும் திராவிட மாணவத் தோழர்களே! வாரீர்! உங்கள் இனப் பாசறையாகிய திராவிட மாணவர் கழகத்தில் வந்து ஒன்றுங்கள்!

திராவிடச் சமுதாயத்தை இன்னல்கள் எங்கெணும் சூழ்ந்திருக்கும் இந்நெருக்கடியான நேரத்திலே நாம் யார்? நம் இனம் எது? நம் கலை எது? என்று திராவிட மக்கள் அறியாது, சூழ்ச்சியையே போர்க் கருவியாகக்கொண்டு திராவிடத்தின் வீழ்ச்சிக்குப் போரிடும் சிறியரைத் தேச பக்தர்களென்று நம்பித் திகைத்து நிற்கும் இக்காலத்தில் திராவிட மக்கட்கு, குறிப்பாக மாணவர்க்கு இனப் பற்றையும், இன உணர்ச்சியையும் தன்மானத்தையும் ஊட்டவேண்டுவதையே உற்ற நற்கருத்தாகக்கொண்டு உழைக்கவே திராவிட மாணவர் கழகம் உலவுகிறது.

வாழ ஒருவரும், வாட ஒருவரும், உழைக்க ஒரு இனமும், உண்ண ஒரு குலமும் ஆக இருக்கும் நிலையை மாற்றி, திராவிடம் திருவிடமாகத் திகழ 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற நிலையை உண்டாக்கி திராவிடச் சமுதாயத்தைச் செம்மையுறச் செய்தல் எங்கள் சீரிய நோக்கம்

'தீண்டாத மனிதன்' என்ற புதுமையான பாகுபாடும், 'சேரி' என்ற தன்மானத்தைத் தீய்க்கும் தனியிடமும், 'தொடாதே, எட்டிநில்' என்ற வேதனை தரும் பேதமொழியும் வெந்து மடிந்து சாம்பலாகும்வரை சளைக்காது உழைப்போரைக் கொண்டது திராவிடமாணவர் கழகம்.

திராவிட இனவுணர்வுபெற்றமாணவத் தோழர்கட்கு எவ்வகையிலும் துணைபுரிவதும் அவர்கட்கு ஆசிரியர்களாலோ, மற்றமுறையிலோ அநீதி இழைக்கப்படுமாயின் அதற்றை எதிர்த்துப் போராடி மாணவர் உரிமையை நிலைநாட்டுவதும் திராவிட மாணவர் கழகத்தின் தலையாய வேலை.

நம்நாடு பொருளாதாரத் துறையில் பொலிவற்று, பீடு நடையுடன் உலவில் உலவுவான்வேண்டி வடநாட்டு பனியாவும், தென்னாட்டுத் தன்னலக் கும்பலும், வெளிநாட்டு வெள்ளையனும் திராவிடத்தைச் சுரண்டுவதினின்றும் தவிர்க்க திராவிடநாட்டைத் தனிநாடாக்கப் போரிடுதல் எங்கள் முன்னணித்திட்டம்.

இக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு, மறுப்புரைக்கும், வசைமொழிக்கும் மருளாமல், கல்லடிக்கும், சொல்லடிக்கும் கலங்காமல், சிறையெனின் சிரிப்புற்று ஏற்றும், இறப்பெனின் இறும்பூதெய்தியும் பெரியாரறமே போறமாகக் கொண்டு உழைக்கும் தொண்டர் குழாமே திராவிட மாணவர் கழகம்.

மாற்றான் பாசறையில் மயங்கி நிற்கும் தோழனே! திருப்பு முகம்! திற விழி! நீ அடைக்கப்பட்டிருக்கும் கூட்டின் கம்பியை முறித்தெறிந்து வா வெளியில்! எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்க புலி எனச் செயல் செயப் புறப்படு வெளியில். திராவிடன் என்ற இன உணர்வுகொண்ட மாணவத் தோழர்களே! திராவிட மாணவர் கழகத்தில் சேர்ந்து உங்கள் இன விடுதலைக்குப் போரிடுங்கள்! நஞ்சுகலந்த பால் போன்றுள்ள திராவிடக்கலையைப் புனிதமாக்கி, தனித் தமிழ்க்கலையை வளர்க்க விரும்பும் கலை நலங்காணும் காளையரே, விரைந்து வாரீர்! சீர்கெட்ட சமுதாயத்தைச் செம்மையுறச்செய்ய செயலாற்றும் செம்மல்களே! சேர்வீர் திராவிடமாணவர் கழகத்தில்.

இளமைக்கு வழிகாட்டியாக முதுபெருந் தாத்தா வெண்தாடி விளங்க, பழம்போற் பழுத்த, பொன்னொத்த மேனி பொலிய, குறையா ஊக்கத்துடனும், குன்றா ஆற்றலுடனும் உணர்ச்சியாலுந்தப்பெற்று உழைக்கும் பெரியார் இராமசாமி அவர்கள் நமக்கு வழிகாட்டிச் செல்கிறார், பகுத்தறிவுப்பாதையினூடே; வாரீர்! வகுத்த வழி நடப்பீர்! அன்று பழமையிலும், எழ்மையிலும், அறியாமையிலும் மூழ்கிக்கிடந்த சீனாட்டைப் பொலிவுள்ள புதிய சீனாவாக்கிய இளைஞர் இயக்கத்தைப்போன்று, திராவிட மாணவர் கழகத்தால்தான் இந்நாட்டை இன்பத்திராவிடமாக்கமுடியும் என்ற உறுதியுடன் உழைக்க வாரீர்! பகுத்தறிவுப்புரட்சிப் பாட்டையில் படையாய்த்திரண்டு செல்ல வாரீர்! மாணவத்தோழர்களே!

'வையம் ஆண்ட
வண்டமிழ் மாபே!
கைவிருப்பைக் காட்ட எழுந்திரு!''

## வாழ்க்கை ஒப்பந்தங்கள்

9-6-46ல் வடபொன்பரப்பி திராவிடர் கழகத் தோழர் ரா. ராமதாஸ் அவர்களுக்கும், தோழியர் பவுனாம்பாள் அவர்களுக்கும் தோழர் கே. வெங்கடாசலம் அவர்களால் வாழ்க்கை ஒப்பந்தம் நடத்திவைக்கப்பட்டது. அதன் நினைவாக குடி அரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் அளிக்கப்பட்டது.

o o

13-6-46ல் திட்டக்குடியில் தோழர் ரா. கிருட்டினசாமி அவர்களும் தோழியர் இரத்தினாம்பாள் அம்மையார் அவர்களுக்கும் தோழர் எ. அப்பாசாமி அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டனர். சு. சக்கரபாணி, எம். கிருஷ்ணசாமி, மு. வைத்தியநாதன், கந்தசாமி ஆகிய தோழர்கள் திருமணம் என்பதுபற்றி பேசினார்கள். அதன் நினைவாக குடி அரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் அளிக்கப்பட்டது.

o o

19-6-46ல் பேட்டைவாய்த் தலையில் தோழர் சண்முகனார்க்கும் தோழியர் சுப்பம்பாளுக்கும் சேலம் தோழர் தனம் அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. வேலூர் நாவலடி, பெருகமணி பிச்சை ஆகிய தோழர்கள் திருமணத்தைப்பற்றிப் பேசினார்கள். குடி அரசு, திராவிடநாடு, விடுதலை முதலிய செய்தித்தாள்களுக்கு முறையே ஒவ்வொரு ரூபாய் அளிக்கப்பட்டது.

o o

19-6-46ல் திராவிட நடிகர் கழகத் தலைவர் ஆர். வி. கோபால் அவர்கள் தலைமையில் தோழர் ஆர். எஸ். மணி அவர்களும் தோழியர் சரோஜனி அவர்களும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். தோழர்கள் டி. பி. வேதாசலம் பி. ஏ., பி. எல்., டி. கே. சீனிவாசன், புலவர் குழந்தையா ஆகியவர்கள் திராவிடர் திருமணம் குறித்துப் பேசினார்கள். விடு

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# குடி அரசு

1948-ஆம் ஜுலை-மீ 20௳

## C. R.

தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் லயோலா காலேஜ் மாணவர்கள் விவாதப் பயிற்சி சங்கப் புத்தாண்டு தொடக்கவிழாவில் பேசும்போது பல உண்மையான விஷயங்களைக் குறிப்பிட்டு இருக்கிறார்.

அவைகளைப் பார்ப்பனப் பத்திரிகைகள் பெரிதும் மறைத்துவிட்டன.

ஆச்சாரியார் சமீபத்தில் பேசிய சில இடங்களிலும், சில சரியான கருத்துக்களை வெளியிட்டுவிட்டார். எடுத்துக்காட்டாக,

"அரசியல் நிர்ணய சபை இந்நாட்டுக்குச் சுதந்திரத்தைக் கொடுத்துவிடாது,

அதன்முடிவாக பல சச்சரவுகளும், குழப்பங்களும் ஏற்படலாம்.

இந்நாடு ஜனநாயகத்துக்குத் தகுதி ("பயிற்சி") இல்லாதது.

நாட்டில் சுதந்திரத்திற்கு, ஜின்னா முதலியவர்கள் சுதந்திரத்தைக் கெடுத்துவிடுவார்கள் என்று நினைத்துவிடாதீர்கள் நீங்கள் சன்மார்க்கத் துறையில் சென்றால் எல்லா எதிர்ப்பும் மறைந்துவிடும்.

இப்போது நாட்டில் ஒழுக்கீனம், நாணயக்குறைவு, காலித்தனம், பித்தலாட்டம், மோசடி, வஞ்சகம் முதலாகிய இழிதன்மைகளையே பார்க்கிறேன். இவைகளிலிருந்து இவை மீளவேண்டும்."

என்பதாகப் பேசியிருப்பதாக 16, 17ஆம் தினசரிகளில் 'மெயிலில்" காணப்படுகின்றன.

ஆச்சாரியாரின் கொள்கை, திட்டம் ஆகியவை எப்படி இருந்தாலும் ஆச்சாரியார் சாதாரண மனிதத்தன்மைக்கு மேற்பட்ட யோக்கியர், நாணயஸ்தர், உண்மைத் தொண்டர், சந்தேகமற்ற, மாசற்ற தன்னலம் மறுத்தவர் (தியாகி) என்பது நமது கருத்து. இது நமது வெகுநாளைய கருத்துமாகும். ஆனால் அவரது கொள்கையும், திட்டமும்பெரிதும்நமக்குமாறானது,நமக்கு கேடு விளைவிக்கக் கூடியது என்பதைப் பலமுறை எடுத்துக்காட்டி இருக்கிறோம். ஐரோப்பியர்கள் கொள்கையும் பெரிதும் நமக்கு அப்படித்தான். சைவர்கள் கொள்கையும் அப்படித்தான். வைணவர் கொள்கையும் அப்படித்தான். பணக்காரன், பிரபு, ஜமீன்தாரன், முதலாளி, வக்கீல், தாசி ஆகியவர்கள் கொள்கையும் அப்படித்தான். இவை இந்நாட்டுப் பெரும்பான்மையான மக்களுக்குக் கேடு செய்வதாகும். ஆனால் இவர்களில் யோக்கியர்கள், நாணயஸ்தர்கள் இல்லையென்று சொல்லிவிட முடியுமா? முடியாது.

என்றாலும் பொதுவாழ்வில் உள்ள மக்களின் யோக்கியதை, நாணயம் ஆகியவைகளைப் பரீட்சிக்க ஒரு கண்மையைத்தான் முக்கிய பரீட்சையாகக் கொள்ளவேண்டும். அதாவது ஒரு மனிதன், தான் ஈடுபட்டு இருக்கும் காரியத்தின் பயனாய் தனது சொந்த தனிப்பட்ட குடும்ப வாழ்க்கைக்கு அவனது பொதுவாழ்வை எப்படிப் பயன்படுத்திக் கொண்டான்.

2. அவனது சொந்த வாழ்க்கை, போக போக்கியம், ஸ்திதி ஆகியவை அவனது பொது வாழ்வில் பிரவேசிக்கும்போது இருந்த தகுதிக்கு மேலானதா, கீழானதா, அதே தன்மை உடையதா?

3. எந்த அளவுக்கு அவன் தனது உழைப்பைப் பொதுவுக்கு ஒப்படைக்கிறான்?

4 அதற்கு ஆக அவன் தனக்கென்று அனுபவிக்கும் பிரதிபிரயோஜனம் என்ன?

என்பனவாகிய பல காரியங்களைக் கொண்டுதான் எந்தப் பொதுவாழ்க்கையில் ஈடுபட்ட பொதுநலத் தொண்டர், தியாகி, யோக்கியர், நாணயஸ்தர் என்பவர்களைப் பரீட்சிக்கவேண்டும்?

இந்த மாதிரி பரீட்சைக் கருவிகொண்டு பார்த்தால் பொதுவாழ்வில் ஆச்சாரியாரை எப்படிப்பட்ட அவர் எதிரியும் தன்னலம் மறுத்த தியாகி என்பதை ஒப்புக்கொண்டுதான் தீர்வர்.

அவர் காங்கரசில் முழுநேரத் தொண்டராய்த் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள முன் வந்தபோது ஒரு பிரபல வக்கீல். அந்தக்காலத்தில் 1919ல் மாதம் ரூ 2000 சம்பாதிக்கும் பிரபல வக்கீல். நல்ல சுகவாழ்வு வாழ்ந்ததோடு, காசு பணங்களைத் தாராளமாய்ச் செலவு செய்பவர். அந்தக்காலத்தில் ஒரு நகரத்தில் ஒரு மனிதனுக்கு உள்ள பெருங் கௌரவ அடையாளமான சேர்மென் முதலிய பதவியில் இருந்து அதைவிட்டு விட்டுவந்தவர். ஆகவே திறமை, வரும்படி, நல்ல தாராள உயர்ந்த வாழ்வு, கௌரவ பெரும்பதவி, இவைகளோடு தக்க பிரபலம், இவ்வளவுக்கும் மேலாக மகா புத்திசாலி என்கின்ற அபிப்பிராய பேதமற்ற பேர் (கியாதி) ஆகியவை இருந்தஒருவர் அவைகளைவிட்டுவிட்டு படிப்படியாய்க்கூட இல்லாமல் ஒரே அடியாய்த் துறந்துவிட்டு பொதுவாழ்வுக்கு வந்தவர். இன்று அவருக்குஆக என்றோ

அல்லது அவரது பிள்ளைகளுக்குஆக என்றோ பொதுவாழ்வில் இருந்து ஒரு அம்மன காசளவுசெல்வமோ, மதிப்போ, சலுகையோ, தேடவோ, பயன் படுத்தவோ நாளதுவரையில் அவர் முயற்சித்ததாகக்கூட எவராலும் சொல்லமுடியாது. உதாரணமாக அவர் பிள்ளைகளை நண்பர்களைத்தவிர வேறு யாருக்குமே தெரியாது என்கின்ற நிலையில்தான் வைத்திருக்கிறார். அவரது வாழ்வு ஒரு சராசரி மனித வாழ்வுக்குக் கிட்டத்தட்டவான சாதாரண வாழ்வேயாகும். ஒரு தம்பிடி வரும்படி வருகிற வாழ்க்கையையும் அவர் மேற்கொள்ளவில்லை. அவரது தன்னல மறுப்புக்கு இவ்வளவு போதும் என்று நினைக்கிறோம்.

இப்படிப்பட்ட அவரிடம் அநேக குற்றம் காணலாம். அவைகளில் எதுவும் அவர் சொந்தத்திற்கு, சுயநலத்துக்கு அல்ல என்பதை நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அவரது பொதுநலக் கொள்கையையும், திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு ஆக செய்யப்படுபவைகளாகவே; அதுவும் அவருக்கு சரி என்ற தன்மையில் நிறைவேற்ற செய்யப்படுவதாகவே இருக்கும்.

ஆகவே இப்படிப்பட்ட வேறு ஒருவரைக் காங்கரசிலோ வேறு எந்த இயக்கத்திலோ காட்டமுடியுமா என்று கேட்கிறோம்.

அதனாலேயேதான் நாம் அடிக்கடி அவரை பொதுவாழ்வில் வேறு எவராலும் வெல்ல முடியாது என்று சொல்லிவருகிறோம்.

ஆச்சாரியார் பாகிஸ்தானையும் திராவிடநாட்டுப் பிரிவினையையும் ஒப்புக்கொண்டபோது காங்கரஸ்காரர்கள் ஆச்சாரியாரைக் கொன்று, கல்நாட்டு

# திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

## 20-7-46ந் தேதி வரை அங்கத்தினர்கள் 49,604

இம்மாதம் 20உ வரை திராவிடர் கழகத்திற்கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் சேர்க்கப்பட்டு தலைமை நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. சேலம் | 8313 | 7. திருநெல்வேலி | 3548 |
| 2. தஞ்சை | 8078 | 8. சென்னை இவ்வாண்டில்1362 | 3232 |
| 3. கோவை | 7015 | 9. தென் ஆற்காடு | 2566 |
| 4. திருச்சி | 5546 | 10. மதுரை | 2042 |
| 5. வடஆற்காடு | 3738 | 11. செங்கல்பட்டு | 1025 |
| 6. இராமநாதபுரம் | 3565 | 12. மற்ற இடங்களில் | 906 |

செயலாளர், மத்திய திராவிடர் கழகம், ஈரோடு.

விழா ஆற்றிவிட்டதாகவே கருதினார்கள். அவர்களது எதிரிகள் குதிக்கால் சுண்டியில் அடிபடும்படி கும்மாளம் போட்டார்கள். காந்தியார், "இரண்டும் வெள்ளை நிறமாக இருந்தாலும் என்னுடையது வெண்ணெய், ஆச்சாரியாருடையது சுண்ணாம்பு, கண்ணில் பட்டால் கண் போய்விடும்" என்றார். பட்டேல், "தென் இந்தியப் பிராமணன் அவர் புத்தியைக்காட்டிவிட்டார்" என்றார். ராஜேந்திர பிரசாத், "ஜாக்கிரதை, ஆச்சாரியார் குட்டிக் கதை சொல்லி, ஏமாற்றிவிடுவார், நம்பாதீர்கள்" என்றார் பண்டித நேரு ஆச்சாரியாரை "பார்க்கவே மாட்டேன்" என்று முகத்தைத் திருப்பிக்கொண்டார். காங்கரஸ் உலகம் "ஆகஸ்ட்டுத் துரோகி" என்று அபாயசங்கு ஊதிற்று. காங்கரஸ் தலைவர்கள் சிறையிலிருந்து விடுபட்டவுடன் வைசிராய் மாளிகை விருந்தில் களித்து வெறிகொண்டு இருக்கும்போது இடைக்கால சர்க்காரில் ஆச்சாரியார் பெயரைப் பழிவாங்கும் தன்மையில், வேண்டுமென்றே நீக்கி வைத்தார்கள், கரிபூசினார்கள், கல்லாலடித்தார்கள், சொக்காயைக் (ஷர்ட்டை) கிழித்தார்கள், தார் ஊற்றினார்கள், தலையில்தட்டினார்கள். இவ்வளவும், மதுரைத் திருவிளையாடல்கள் நடக்கும்போதும், குடிஅரசு எழுதிற்று. என்னவென்றால், "காங்கரஸ் ஆச்சாரியாருடையது, காங்கரசுக்கு கொள்கையோ, திட்டமோ வகுக்க ஆச்சாரியாருக்குத்தான் உரிமை, அவர் சொல்லுவதைத் தவறு என்று சொல்ல இன்று காங்கரசில் யாருக்கும் உரிமைஇல்லை, அவர் சொல்தான் நாளைக்கு வெற்றி பெறும் என்று பந்தயம்கூறி எழுதி இருந்தோம்.

இந்த சமயத்தில் ஆச்சாரியாரே பல கூட்டங்களில் சொன்னார். என்னவென்றால்,

"காந்தியார் பெரியவர்தான் ஆனால் நான்?"

"காந்தியார் புத்திசாலிதான் ஆனால் நான்?"

"காங்கரஸ் பெரியதுதான், அதன் பெருந்தன்மை எனக்

கும் தெரியும்தான், அது சொல்வது கேட்கப்படவேண்டியது தான்; ஆனால் நான் சொல்லுவது?''

''நான் சொல்வதை கேட்டால் கேளுங்கள் கேட்காவிட்டால் போங்கள். உங்கள் காங்கரஸ் இல்லாமலே என் கருத்தை நாட்டில் பரப்ப நான் முயற்சிக்கிறேன்''

என்று சொன்னார். சொன்னதோடு அல்லாமல் காங்கரசுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்தார். காங்கரசைவிட்டு விலகினார். விலகியதோடு நில்லாமல் காந்தியாரையே தனது கருத்தை ஒப்புக்கொள்ளச் செய்து, ஜின்னா வீட்டுக்கு அனுப்பினார். மறுபடியும் காங்கரஸ் காரியக் கமிட்டியில் இருக்க பண்டித நேருவினால் வேண்டிக் கொள்ளப்பட்டார். இன்று, முதல் மந்திரி பிரகாசமும் அவர் வாலைப் பிடிக்க ஓடுகிறார் என்பதும் நிலைமை; தமிழ்நாடு காங்கரஸ் ''[illegible]'' யார் நினைக்கும்படி நடந்து கொண்டு இப்படிச் சொல்லுகிறார். எப்படிச் சொல்லுகிறார்?

அரசியல் நிர்ணயசபையால் பெரிய போராட்டம்தான் ஏற்படும்; நாடு ஜனநாயகத்துக்குத் தகுதிஇல்லை; நாட்டில் நாணயம்,ஒழுக்கம் இல்லை,பித்தலாட்டம், புரட்டு, காலித்தனம், மோசடி, வஞ்சகம் முதலியவை மலிந்து கிடக்கின்றன என்று சொல்லுகிறார். இவை எங்கே இருப்பவைகளைப் பார்த்துச் சொல்லுகிறார் என்றால் முதலாவதாகப் பெரிதும் காங்கரசிலிருப்பதைப் பார்த்தும், காங்கரசில் தனது எதிர்க்கட்சியாரை மனதில் வைத்துக்கொண்டும், தன்னிடம் அவர்கள் நடந்து கொண்டதைப் பார்த்துமே உண்மையைக் கொட்டிவிட்டார்.

நாடு ஏன் ஜனநாயகத்திற்குத் தகுதி இல்லை என்று சொன்னார் என்றால், தமிழ்நாடு காங்கரஸ் ஜனநாயகம், ஆச்சாரியாரை வெறுத்து ''ஒழித்தே'' விட்டது. 4அணா மெம்பராகக் கூட இருக்க அனுமதிக்கவில்லை. ஆனால் காந்தி, நேரு சர்வாதிகாரம் ஆச்சாரியாரைக் கட்டி அணைத்து காரியக் கமிட்டி அங்கத்தினராய் முடி சூட்டி விட்டது. எப்படி? தமிழ் ஆந்திர நாட்டுக் காங்கரஸ் (ஜனநாயகம்) ஆச்சாரியார் காலுக்கு முத்தமிடும்படியாக ஆக்கப்பட்டுவிட்டது.

இதை தமிழ் ஆந்திரநாட்டு மக்கள் மூச்சுப்பேச்சு காட்டாமல் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். இந்த மானமற்ற, ரோஷமற்ற, சுயமரியாதை உணர்ச்சி அற்ற மக்களைப் பார்த்தபிறகு ஆச்சாரியார் இந்தநாடு ஜனநாயகத்துக்குத் தகுதிஇல்லை என்று சொல்லாமல் வேறு என்ன சொல்லி இருந்தால் அவர் புத்திசாலித்தனத்துக்குத் தகுதிக்கும் ஏற்றதாக இருந்திருக்கும்?

மற்றும் ஆச்சாரியார் இந்த மக்களுக்கு நாணயம், ஒழுக்கம் முதலியவை இல்லை என்றார். இதற்கு மற்ற காரியங்கள் எப்படியோ இருக்கட்டும். சென்னைமாகாணத்தில் மந்திரிகள் அமைக்கப்பட்டதும், அரசியல் நிர்ணயசபையில் பொப்பிலி அரசர், குமாரராஜா ஆகியவர்களுக்குக்காங்கரஸ் இடம் கொடுத்ததும் எதற்குஆக? அதில் சிறிதாவது நாணயம ஒழுக்கம் இருக்கிறது என்று தமிழ், ஆந்திரநாட்டுக்காங்கரசு கருதமுடியுமா? மந்திரிகளின் தன்மை எப்படி இருந்தாலும் இவ்விரு கனவான்களும் மற்றவர்களைப் பார்க்கும்போது பெரியவர்கள் என்பதிலும் அவர்கள் (அதாவது பொப்பிலி—குமாரராஜா) அப்பதவிக்கு தலைமை வகிக்கக்கூட அருகதையுடையவர்கள் என்பதிலும் ஆட்சேபம் சொல்ல இடமில்லை.

மற்ற கட்சிகளை அலட்சியம் செய்துவிட்டு, (''ஏழை மக்களுக்குப் பாடுபடும்'' காங்கரஸ்) ஜமீன்தாரர்களையும், பிரபுக்களையும் போய் தஞ்சமடைவானேன்? இதில் ஒழுக்கீனம், நாணயத்தவறுதல் இல்லாமல் இருக்கமுடியுமா? இந்த வெளிப்படையான இரகசியத்தை நன்றாக உணர்ந்துதான் ஆச்சாரியார் தங்கள் (காங்கரஸ்) மக்களுக்கு இந்த குணங்கள் கூடாது, மாற்றப்படவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்.

மற்றும் மதுரை முதலிய இடங்களைப் பார்த்தே, அதில் தனது நண்பர்கள் வைத்தியநாதய்யர் போன்றாரும் ஈடுபட்டதை உணர்ந்தே பித்தலாட்டம், காலித்தனம் முதலியவை காண்கிறேன் என்று சொல்லி இருக்கிறார்.

ஆச்சாரியார் சொன்னவைகள் எல்லாம் காங்கரசிலும் தன்னைச் சுற்றியும் இருப்பதாகக்கண்டு சொல்லி இருந்தாலும் அவை நாட்டில் மற்ற எல்லா ஸ்தாபனங்களிலும் இருப்பதையும் உணர்ந்துதான் சொன்னார் என்றாலும் அதையும் யாரும் அடியோடு மறுத்துவிடமுடியாது. வேண்டுமானால் டிகிரி வித்தியாசமிருக்கலாம்.

மதப்பிரசாரம் ஏற்பட்டபிறகே மக்கள் எப்படி மிருகத்தன்மை அடைந்தார்களோ அதுபோலவே காந்தியாரின் சத்தியம், அஹிம்சை, கடவுள் தன்மை, கடவுளோடு நேரே பேசுவது, பிரார்த்தனை, சத்திய சோதனை ஆகிய காந்தீயப் பிரச்சாரங்கள் ஏற்பட்டபிறகே மக்கள் மிருகங்களானார்கள்,

நாணயத்தவறுடையவர்கள் வஞ்சகர், மோசக்காரர், பித்தலாட்டக்காரர், ஒழுக்க ஈனக்காரர்கள் அதிகமாக ஆனார்கள் என்பதை யெவரும் மறுக்க முடியாது.

இன்று பூரண அரசியல் ஆதிக்கம் இந்தக் கூட்டத்தினர் கைக்கு, அதாவது ஆச்சாரியார் குறிப்பிட்டது போன்ற குணங்களுடைய காங்கரசார் கைக்கு வந்துவிட்டால் நிலைமை எப்படி இருக்கும் என்பதை நாம் சித்தரிக்கவேண்டியதில்லை மதுரை, சேலம், பாப்பாரப்பட்டி ஆகிய ஊர்களைப் பார்த்தால் போதும். சென்னை சட்டசபை மந்திரிசபையைப் பார்த்தாலே போதும். எனவே இன்றைய கேவலமான நிலைமை இந்நாட்டைவிட்டு ஒழிய வேண்டுமானால் இதற்குப் பெருந்துணையாயும் தூண்டுகோலாயும் இருந்து வரும் காங்கரசாவது, காங்கரஸ் சர்வாதிகாரத் தலைமையாவது ஒழிந்தாகவேண்டும். ஏனென்றால், இந்தமாதிரியான இழிகுணங்கள் கடவுள் பேரால், மதத்தின்பேரால், மகான்கள் பேரால், அரசியல் பேரால், சுய ஆட்சியின் பேரால் அனுமதிக்கப்பட்டால் பிரசாரம் செய்யப்பட்டால் அவை மக்களிடையில் பரவாமல், காரியத்தில் நடைபெறாமல் எப்படி இருக்க முடியும்? அதுவும் இன்று இந்நாட்டில் யோக்கியர்களுக்கு இருக்க இடமே இல்லாமல் செய்துவிட்டால் அப்புறம் யார் மீதி இருப்பார்கள்? மாகாண அதிகாரிகள், மாபெரும் ஜட்ஜுகள் சந்தேகப்படப் படுகிறார்கள்.

எனவே ஆச்சாரியார் சொன்னது அவ்வளவும் சரி என்று ஒப்புக்கொள்ளுகிறோம். அவரைச் சுற்றியே மிகுந்து இருக்கிறது. அதைப் பார்த்தே அவர் பரதவிக்கிறார். என்றாலும் இதற்கு ஆச்சாரியார் என்ன பரிகாரம் செய்யப்போகிறார் என்பதே நமது பிரச்னையாகும். அதற்குஆகவே இத் தலையங்கம்.

உண்மையில் ஆச்சாரியார் மனிதத்தன்மைக்கு மேம்பட்டவர். எப்படி என்றால் தனக்காக வாழ்பவன் மனிதன், அப்படிப்பட்ட மனிதனின் பொது வாழ்வின் வேஷத்தை தனது நலனுக்கு பயன்படுத்துபவனும், அதன்பயனாய் தனது தகுதிக்கு மேல் வாழ்பவனும் மனிதத்தன்மைக்குக் கீழ்பட்டவன். தனக்குஆக ஒருநாழியும் வாழாமலும், தனதுதகுதிக்குக் கீழாக சொந்தவாழ்வு வாழ்பவனும் போற்றுதல், தூற்றுதல் ஆகியவற்றை லட்சியம் செய்யாதவனும் மனிதத் தன்மைக்கு மேம்பட்டவனேயாவான். அப்படிப்பட்டவர்களைத்தான் இயற்கை மகான் என்றும் சொல்லுவார்கள். இப்படிப்பட்ட நிலையில் உள்ள ஆச்சாரியார் தனது இப்படிப்பட்ட நிலையில் செய்தது என்ன? அவரது இப்படிப்பட்ட உழைப்பினால் மக்களுக்கு ஏற்பட்ட நலம்தான் என்ன? மாற்றம்தான் என்ன? ஏற்பட்ட உணர்ச்சிதான் என்ன? ஒருவன் கருங்கல்லை உடைத்து ஜல்லியாக்கி மக்கள் நடக்கும் ரோட்டுக்குப் போட்டால் யாரும் குறைசொல்ல மாட்டார்கள். பச்சை, சிவப்பு போன்ற மரகத மாணிக்கக் கற்களை உடைத்து ரோட்டுக்குப் போட்டால் அவன் எவ்வளவு செல்வவானாலும், கருங்கல்லை மாணிக்கமாக்கும் மகானாய் இருந்தாலும் அவனை பயித்தியக்காரன் என்றுதான் மக்கள் சொல்லுவார்கள் என்பதோடு மாத்திரமல்லாமல் உண்மையிலேயே அவன் பயித்தியக்காரன் அல்லது மடையனே ஆவான். அந்த நிலையில் இருக்கிறார் ஆச்சாரியார். அவரது தியாகம், புத்தி, தொண்டு ஆகியவற்றை இயற்கையிலேயே வஞ்சக அயோக்கியக் கூட்டமாகிய பார்ப்பனர்களுக்கு அர்ப்பணம் செய்கிறார். அதுதான் தொலைந்து போனாலும் வடநாட்டு ஆரியர்களுக்கு உழைக்கவா இவ்வளவு தியாகம், இவ்வளவுபுத்தி, இவ்வளவுதொல்லை துன்பம் சகிப்பு ஆகியவைகளை செலவிடுவது? என்று கேட்கின்றோம். செத்தால் என்ன வரும்? இது வேதாந்தமல்ல— அறிவாளிக்குப் போடும் கேள்வி. ஆச்சாரியார் உழைப்பால் பிழைக்கும், பிழைத்த பார்ப்பனன் மேலும் அயோக்கியன், வஞ்சகன், மோசக்காரன் ஆவதல்லாமல் அவன் எல்லாம் ஆச்சாரியார் ஆவானா? நாடும் இன்னும் பாழாகும் என்பதோடு நாடு விழித்தால் இந்தப் பார்ப்பனர் சித்திரவதைக்காளாவார்கள் அல்லது நாடு கடத்தப்படுவார்கள் என்பதல்லாமல் வேறு என்ன நடக்கும்?

எனவே தென்னாட்டைப் பொருத்தவரையாவது ஆச்சாரியாரும் அவருக்கு உண்மையான சிஷ்யர்கள் யாராவது இருந்தால் அவரும் மறுபடி மறுபடியும் ஒழுக்க, ஈன, நாணயக்குறைவு, வஞ்சகம், காலித்தனம், மோசடி ஆகிய குணங்களில் சேற்றில் மூழ்கி வழியில்லாமல் கரையேறி, மக்களையும் கரையேற்ற முயலுவார்களானால் ஒரு அளவு நாடாவது [illegible] வேற்று பின்சென்று பயனடையும் என்றும் இல்லாவிட்டால் ஆச்சாரியார் வாழ்வு அபத்த வாழ்வாய்த்தான் முடியும் என்றும் கூறுவோம்.

## (3ம் பக்கத் தொடர்ச்சி)

தலை, குடி அரசு, திராவிடநாடு, தொழிலாளர் மித்திரன், பொன்மலை திராவிட வாலிபர் கழகம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக முறையே ஒவ்வோர் ரூபாய் அளிக்கப்பட்டது.

0 0

5-6-46ல் மலைகொட்டியூரில் தோழர் எம். பி. வடிவேல் அவர்கள் தலைமையில் தோழர்கள் சில்மென் ராஜா-புஷ்பராணி, தலைகொண்டான் கவுண்டர்—ராஜம்மாள், முனியப்பகவுண்டர்—குப்பம்மாள் ஆகியோர் திருமணங்கள் நடைபெற்றன.

0 0

3-6-46ல் நெடுஞ்சேரி தோழர் பன்னீர்செல்வம்—சகுந்தலா திருமணம் பெரும்பண்ணையூரில் நடைபெற்றது. அதன் நினைவாக குடி அரசுக்கு ரூ. 1 நன்கொடையனுப்பப்பட்டது.

0 0

தோழர்கள் தேவூர் சமதர்மம்-நாகலட்சுமி திருமண நினைவாக குடி அரசுக்கு ரூ. 1. அனுப்பப்பட்டது.

0 0

சென்னைத்தோழர் வி. வி. முருகேசபாகவதர் தலைமையில் 5-6-46 புதன்கிழமை கோதண்டன்—சயந்தி திருமணம் நடந்தேறியது.

0 0

21-4-46ல் திருச்சி, வாளனேரி சித்தலைத்திபசாலையில், டாக்டர் க. பிச்சமுத்து அவர்கள் தலைமையில் தோழர் கா. சரவணமுத்து அவர்களும், தோழியர் விசயலட்சுமி அவர்களும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். திருமணத்தைக்குறித்து, அ. இ. சுவாமி, ஈ. ரா இரங்கசாமி ஆகிய தோழர்கள் பேசினார்கள். குடி அரசு வளர்ச்சிக்காக ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

0 0

1-7-46ல் காஞ்சிபுரம், நெல்லுக்காரத்தெரு ராசகோபால திருமண மண்டபத்தில் தோழர் மு. இரத்தினம் அவர்கள் தலைமையில் தோழர் எம். நமசிவாயம் அவர்களும், தோழியர் இராஜேஸ்வரி அவர்களும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டனர். தளபதி அண்ணாதுரை, தோழர்கள் சந்திரசேகரன், அய்யம்பெருமாள், மூர்த்தி, நாகராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். திருமணத்தின் நினைவாக விடுதலை, குடி அரசு, திராவிடநாடு ஆகிய பத்திரிகைகளுக்குத் தனித்தனியே இரண்டு ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

0 0

1-7-46ல் கண்டியூரில் கும்பகோணம் தோழர் கோ. நடேசன் அவர்கள் தலைமையில் தோழர் எஸ். இராமானுசம் அவர்களும், தோழியர் சாகரெத்தினம் அவர்களும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டனர். அது காலை பாவலர் பாலசுந்திரம், எம். எஸ். நாதன், புலவர் இராமநாதன், ஆர். இரத்தினசபாபதி ஆகிய தோழர்கள் சொற்பொழிவாற்றினர். குடி அரசு வளர்ச்சிக்காக 1 ரூபாய் அளிக்கப்பட்டது.

0 0

10-7-46ல் திருவண்ணாமலையில் தோழர் சி. சிவசாமி அவர்களும் தோழியர் நாகரத்தினம்மாள் அவர்களும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டதின் நினைவாக குடியரசு, திராவிடநாடு, விடுதலை, உள்ளூர் திராவிடகழகம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகத் தனித்தனியே ஒவ்வோர் ரூபாய் அளிக்கப்பட்டது.

0 0

1-7-46ல் திருவிழந்தூரில் தோழர் ரா. உல்லாசன் அவர்களும் தோழியர் செல்லம் அவர்களும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டதின் நினைவாக குடியரசு, விடுதலை, திராவிடநாடு ஆகிய இதழ்களுக்கு முறையே ஒவ்வொரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

## இயக்கச் செய்திகள்

26-5-46ல் கொய்யவாற்றில் தோழர் என். ஆர். சுப்பிரமணியம் தலைமையில் நடந்த கூட்டத்தில் டி. கே. சீனுவாசன், கோவை பாலசுந்தரம் ஆகியோர் பேசினர். கூட்டம் முடியுந் தருவாயில் காலிகள் எறிந்த கற்களால் ஒரு முதியவருக்கு கன்னத்தில் காயம் பட்டது. தோழர் இராசகோபால் நன்றி கூறினார்.

0 0

29-5-46ல் சென்னை 12வது வட்டம் திராவிடர் கழகக்கூட்டம் தோழர் குப்புசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அன்பழகன், எம். கே. டி. சுப்பிரமணியம், என். வி. நடராசன், திராவிடமணி பி. ஏ., எஸ். ஆர். சாண்டோ மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர். கே. ஏ. ராமநாதன் நன்றி கூறினார்.

0 0

28-4-46ல் வடார்க்காடு மாவட்ட தாழ்த்தப்பட்டோர் சம்மேளன தேர்தல் கூட்டம் வேலூரில் தோழர் டாக்டர் ஈ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்று நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

0 0

19-5-46ல் சென்னை திருவொற்றியூர் ஆதிதிராவிட முன்னேற்ற சங்க திறப்புவிழா செங்கல்பட்டு ஜில்லாபோர்டு மெம்பர் பி. எஸ். மணி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது; பலர் பேசியபின் செயலாளர் சொக்கலிங்கம் நன்றி கூறினார்.

0 0

18, 20-5-46 தேதிகளில் சப்புலாபுரம் செங்குந்த வாலிபர் சங்க ஆதரவில் தோழர்கள் சவரிமுத்து, எஸ். திருவுடையார் ஆகியோர் தலைமைகளில் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன.

0 0

6-5-46 நாகையில் தோழர் டி. பி ஆறுமுகம் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் டி. கே. சீனுவாசன், புலவர் குழந்தையா ஆகியோர் பேசினர். நாகை தேசியப் பள்ளியில் காலியான செயலாளர் இடத்திற்கு தோழர் வி. பி, கே காயாரோகணம் அவர்களை ஏற்படுத்தும்படி தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

0 0

29-5-46ல் சென்னை பொம்மு செட்டி தெருவில் தோழர் செல்வராசு தலைமையில் நடந்த சுயமரியாதை சங்கக் கூட்டத்தில் சங்கத்தின் சார்பில் பயிற்சிக்கூட்டங்கள் நடத்தவேண்டி மயிலை சீனி வெங்கடசாமி, புலவர் செல்வராசு ஆகியோரை கேட்டுக்கொண்டும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

Edited: Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.